

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2024) உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வரும் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் உடல்நிலை குறித்து மருத்துவமனைக்கு நேரில் சென்று மருத்துவர்கள் மற்றும் குடும்பத்தினர்களிடம் கேட்டறிந்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் கோபண்ணா ஆகியோர் உள்ளனர்.

### குலத்தொழில் முறையைக் கொண்டுவரும்

# விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது!

## டெல்லியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, நவ.30 -

“குலத் தொழில் முறையைக் கொண்டுவரும் ஒன்றிய அரசின் திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது” என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியுள்ளார்.

டெல்லியில் நேற்று முன்தினம் பத்திரிக்கையாளர் சந்திப்பில் பிரதமர் விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல் படுத்தாது எனும் முடிவு குறித்த கேள்விக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் பதிலளித்துள்ளார்.

அதில்அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-



தி.மு.க. விஸ்வகர்மா திட்டத்தை முழுமையாக நிராகரித்துவிட்டது. தமிழ்நாட்டின் முதலமைச்சர், தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. தீவிரமாக எதிர்ப்பதன் காரணத்தை ஏற்கனவே மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

எனது நிலைப்பாடும் அதுதான். சாதி அமைப்பையும், பெற்றோர்களின் தொழிலையே குழந்தைகள் ஏற்கவேண்டும் எனும் குலத்தொழில் முறையையும் அத்திட்டம் இங்கு மீண்டும் கொண்டுவருகிறது. அதை நாங்கள் ஏற்க முடியாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

### விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# 3 ஆண்டுகளில் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கி சாதனை!

## மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிக்கை!

சென்னை, நவ. 30 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மூன்றாண்டு காலத்தில் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் முந்தைய ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 1,38,592 மட்டுமே என மின்சாரத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக 1989-1990 ஆண்டில் உழவர்களுக்கு இலவச மின்சாரத் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொலைநோக்குப் பார்வையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தால் தமிழ்நாட்டின் கிராமங்கள் துரித வளர்ச்சியை அடைந்தன. விவசாய நிலப்பரப்பு விரிவடைந்தது. விவசாயிகள் தன்னிறைவு பெற்றனர்.

2010-2011ஆம் ஆண்டு காலத்தில் ஒரே ஆண்டில் 77,158 இலவச வேளாண் மின் இணைப்புகளைக் கொடுத்துச் சாதனை படைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**மூன்றாண்டில் சாதனை புதிய சரித்திரம்!**

அந்தச் சாதனைகளின் அடிச்சுவட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகளைக் கொடுத்துப் புதிய சரித்திரம் படைத்திருக்கிறது.



அதற்காக மின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2016-2021 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் உழவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை 1,38,592 மட்டுமே. ஆனால், ‘திராவிட மாடல்’ ஆட்சியில் மூன்றே ஆண்டுகளில் அந்த எண்ணிக்கையைக் கடந்து 1,69,564 புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ளது.

**3,38,380 ஏக்கர் பாசன வசதி!**

வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக திட்டங்களைத் தீட்டி அக்கறையோடு செயலாற்றிவரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளால் வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இதனால், 3,38,380 ஏக்கர் வேளாண் நிலங்கள் பாசன வசதியைப் பெற்றிருக்கின்றன.

**உழவர்களின் உள்ளத்தை வென்ற முதல்வர்!**

உழவர்களின் உண்மைத் தோழனாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்; உழவர்களின் உள்ளத்தை வென்றிருக்கிறார்.

இவ்வாறு மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மும்பை மாநில தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## அலிசேக் மீரான் சிறப்புரை:

மும்பை, நவ. 30 -

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் அவர்கள் பிறந்த நாள் விழா 30-11-24 சனிக்கிழமை மும்பை மாநில திமுக இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமார் தலைமையில் தானே மாநகரில் உள்ள ஆதவ் பாக் அரங்கம் விஜய் அப்பார்ட் மெண்ட், டி விங், கிசன் நகர் தானே வில் மாலை சரியாக 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாநில செயலாளர் அலிசேக் மீரான் விழாச் சிறப்புரையாற்றுகிறார். துணை அமைப்பாளர் கி. வீரமணி வரவேற்றிட, மும்பை தி.மு.க. பொறுப்பாளர் கருவூர் இரா. பழனிசாமி, புறநகர் அவைத் தலைவர் ஜேம்ஸ் தேவதாசன், புறநகர் பொருளாளர் பி கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் வதிலை பிரதாபன், அ.இளங்கோ,

திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், அவைத் தலைவர் வே.ம. உத்தமன், இலக்கிய அணித் தலைவர் வே.சதானந்தன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், தி.மு.கழகப் பேச்சாளர் முகமது அலி ஜின்னா, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ. ஜைனுல்லாபுதீன், இலக்கிய அணி பொய்சர் மூர்த்தி, இளைஞரணித் துணை அமைப்பாளர் இரா.கணேசன், இலக்கிய அணிப் புரவலர் எஸ்.பி. குமரேசன், டோம்பிவிலி கிளைக் கழகச் செயலாளர் வீரை சோ.பாபு ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

விழாவில் பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகப்பை மற்றும் நோட்டுப் புத்தகங்களை தானே நகர திமுக முன்னோடி ஜாகிர் உசேன், கிளை செயலாளர் பாலமுருகன், இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன, கிளைச் செயலாளர் சிவக்குமார் ஆகியோர் வழங்குகின்றனர்.

என்.வி. சண்முகராசன், எஸ்.பி.செழியன், எல்.பாஸ்கரன், க.ஜீவானந்தம், மெஹபூப் பாஷா, தமிழினநேசன், பெருமாள், பழனி, முஸ்தாக் அலி, தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி. பசுபதிநாதன், சி.சுடலை யாண்டி, நம்பி, ராஜேந்திரன், மூர்த்தி, ஆழ்வார், ஜஸ்டின், வேல் முருகன், எம்.பொன் மணி, கு. தர்மலிங்கம்., சு. சேகர் சுப்பையா, மா. துரைராஜன், அ.கனகராஜ், அ.சேகர், அய்யாச்சாமி, செ. துரை, பி.கட்டிமுத்து, ப.கணேசன் ராஜன், அ. பாண்டு., வீ.கே.சிவா, வீ.முனியன், அ.தமிழ்செல்வன், இல. ராசாங்கம், மு.கோவிந்த ராஜ் , ஸ்டீபன் டேவிட் மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்க வுள்ளார்கள்.

இறுதியாக மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் உதய் பால முருகன் நன்றி உரை ஆற்றுகிறார்

விழாவிற்கான ஏற்பாடுகளை மாநில இளைஞரணித் தோழர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள். அனைவரும் நிகழ்வில் கலந்து மகிழுமாறு நிகழ்ச்சி எற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கி றார்கள்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 7 | பாபநாசம் | ஸ்ரீ துர்கா மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், பாபநாசம், தஞ்சாவூர். |
| | மாலை 4.00 மணி | | விராலிமலை | எம்.கே.எஸ். திருமண மண்டபம், மேட்டுச்சாலை, இலுப்பூர் புதுக்கோட்டை. |
| | காலை 9.00 மணி | 8 | சங்கரன்கோவில் | கோகுலம் மஹால், ரத வீதி, சங்கரன்கோவில். |
| | மாலை 4.00 மணி | | ஆலங்குளம் | ஏ.ஜெ. மஹால், மலைக்கோயில் வளைவு எதிர்ப்புறம், தென்காசி பிரதான சாலை, ஆலங்குளம், தென்காசி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த விபத்தில்

# உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 30 -

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம், மண்டையூர் காவல் நிலையத்தில் பெண் காவலராகப் பணிப்புரிந்துவந்த திருமதி.விமலா (வயது 28) க/பெ. மணிகண்டன் என்பவர் 28.11.2024 அன்று காலை 09.30 மணி யளவில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர், பள்ளத்துப்பட்டியிலிருந்து பணி நிமித்தமாக புதுக்கோட்டை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்புறமாக வந்த நான்குசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பெண் காவலர் திருமதி.விமலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

பெண் காவலர் திருமதி. விமலா அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருமதி.விமலா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தின ருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# பரந்தூர் - ஓசூரில் பசுமை விமான நிலையம்- எடுத்த நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி

புதுடெல்லி, நவ. 30 -

பரந்தூர் - ஓசூர் பசுமை விமான நிலையம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் பரந்தூர் மற்றும் ஓசூரில் பசுமை விமான நிலையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த நடவடிக்கைகளின் விவரம் தொடர்பாக மாநிலங்களவை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு சிவில் விமான போக்குவரத்து இணை மந்திரி முரளிதர் மொகல் அளித்த எழுத்துப்பூர்வ பதிலில், ஓசூர் விமான நிலையத்துக்கு பாதுகாப்பு அமைச்சகம் தடையில்லா சான்று வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அந்த பதிலின் விரிவான விவரம் வருமாறு:

காஞ்சீபுரம் மாவட்டம் பரந்தூரில் பசுமை விமான நிலையம் அமைப்பதற்கான தள அனுமதியைப் பெற சிவில் விமான போக்குவரத்துத்துறையிடம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (டிட்கோ) விண்ணப்பித்து இருந்தது. இதன்பேரில் கடந்த ஆகஸ்டு மாதம் தள அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொள்கை ஒப்புதலுக்கான விண்ணப்பம் டிட்கோ விடம் இருந்து பெறப்பட்டு இருக்கிறது.



ஓசூரில் பசுமை விமான நிலையத்துக்காக முன்மொழியப்பட்ட 4 தளங்களை விமானநிலைய ஆணைய அதிகாரிகள் மற்றும் டிட்கோ அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த செப்டம்பர் மாதம் ஆய்வு செய்தது. அந்த பகுதியில் விமானப்படை மையம் இருப்பதை கருத்தில்கொண்டு பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளுடன் கலந்து பேசப்பட்டது. பாதுகாப்பு அமைச்சகம் தள அனுமதியை வழங்க நிபந்தனை களுடன் தடையில்லா சான்று வழங்கி இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சையில் பிரபல திரைப்பட நடிகர் துரை.சுதாகர் 48 விவசாயிகளுக்கு 48 பாரம்பரிய நெல் விதைகளை வழங்கினார். உடன் தஞ்சை மத்திய மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.ராணி கண்ணன், திருக்கானூர் பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சேவியர், வல்லம் கோவிந்தன், லாசர் உள்ளிட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.